# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 112 | 4 Pages | 25.11.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 112 | 4 பக்கங்கள் | 25.11.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## சிபிஐ விசாரணை அனுமதியை திரும்பப்பெற மந்திரி சபை முடிவு: கருத்து தெரிவிக்க மறுத்த டி.கே. சிவகுமார்



கர்நாடகா, நவ.25

கர்நாடக மாநிலத்தில் துணை முதல்வர் டி.கே. சிவக்குமார். கர்நாடகாவில்கடந்த2017ம்ஆண்டு பா.ஜனதா ஆட்சி நடைபெற்றபோது, டி.கே. சிவக்குமாருக்கு சொந்தமான இடங்களில்வரிமானவரிச்சோதனை நடைபெற்றது.அதனைத்தொடர்ந்து அமலாக்கத்துறை தானாக முன்வந்து விசாரணை மேற்கொண்டது.

இதனடிப்படையில் டி.கே. சிவக்குமாரிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. கர்நாடக அரசிடம் அனுமதி கேட்டது. அப்போதைய பா.ஜனதா அரசு அனுமதி அளித்தது.

இதனை எதிர்த்து டி.கே. சிவக்குமார் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அப்போது டி.கே. சிவக்குமாரிடம் சிபிஐ விசாரணை நடத்த வழங்கப்பட்ட அனுமதியை ரத்து செய்ய கர்நாடக மாநில உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதனால் மேல்முறையீடு செய்துள்ளார்.

இந்த நிலையில், கர்நாடக மாநில மந்திரிசபை கூட்டத்தில், டி.கே. சிவகுமாரிடம் சிபிஐ விசாரணை நடத்த வழங்கப்பட்ட அனுமதியை திரும்பப்பெற முடிவு செய்யப்பட்டுள்ளது என செய்தி வெளியானது.

இந்த நிலையில் மந்திரிசபை முடிவு குறித்து டி.கே. சிவகுமாரிடம் கேட்கப்பட்டது. அதற்கு டி.கே. சிவகுமார் பதில் அளிக்கையில் "நான் செய்தித்தாளில்தான் இந்த தகவலை படித்து தெரிந்து கொண்டேன். மந்திசபை கூட்டத்தில் நான் பங்கேற்கவில்லை. யார் பேச வேண்டுமோ, அவர்கள் பேசுவார்கள்.

நான் இரண்டு நாட்கள் தெலுங்கானாவில் பிரசாரம் செய்கிறேன். கட்சி கேட்டுக்கொண்டால் அதை நீட்டித்துக் கொள்வேன்" என்றார்.

## ஊபரின் அடுத்த அதிரடி: உற்சாகத்தில் பயணிகள்




அமெரிக்கா நவ.25

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பன்னாட்டு நிறுவனம் ஊபர் டெக்னாலஜிஸ். பொதுமக்களுக்கு எளிமையான முறையில், குறைந்த கட்டணத்தில் வாகன போக்குவரத்து, உணவு வினியோகம், சரக்கு போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் சேவைகளை வழங்குவதில் உலகெங்கும் பல நாடுகளில் ஊபர், பிரபலமாக விளங்குகிறது.

இந்நிலையில் ஊபர், மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவில், அலுவலகம் செல்லும் மக்களுக்காக பேருந்து சேவையை தொடங்க போவதாக அறிவித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயண தடங்களின் வழியாக, நகரில் அதிக மக்கள் வசிக்கும் இடங்களை, மாநிலத்தின் பிற மாவட்டங்களுடன் இணைக்க உள்ளது.

தொடக்க நிலையில் 10 பேருந்துகளுடன் இயங்க உள்ள இந்த சேவையில், அடுத்த வருட மார்ச் மாதம் 60 ஏர்கண்டிஷன் வசதி உடைய பேருந்துகள் வரை எண்ணிக்கை அதிகரிக்கப்படும். இந்த பேருந்துகளில் 19லிருந்து 50 வரை பயணிகள் பயணம் செய்யலாம்.

மேற்கு வங்கத்தில் சுமார் ரூ.84 கோடி ($10 மில்லியன்) முதலீடு செய்ய போவதாகவும், இதன் மூலம் அங்கு அடுத்த 5 ஆண்டுகளில் 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என்றும் ஊபர் அறிவித்துள்ளது.

சில நாட்களுக்கு முன், மேற்கு வங்க அரசு, அம்மாநிலத்தில் தொழில்துறையில்முதலீடுசெய்வதற்குபலஅயல்நாட்டுநிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. அவர்கள் பங்கேற்ற மேற்கு வங்க உலக வர்த்தக சந்திப்பு (Bengal Global Business Summit) எனும் கூட்டம், மேற்கு வங்க அரசால் நடத்தப்பட்டது. அந்த சந்திப்பில் மேற்கு வங்க போக்குவரத்து துறையுடன், ஊபர் நிறுவனம், பேருந்து சேவைக்காக ஒப்பந்தம் புரிந்தது. ஊபர் நிறுவனத்தின் பேருந்து சேவையில் ஊபர் செயலி மூலம், பயணிகள் ஒரு வாரம் முன்னதாகவே இருக்கைகளை பதிவு செய்து கொள்ளவும், பேருந்து செல்லும் வழித்தடத்தை மொபைல் மூலம் அறிந்து கொள்ளவும், சென்று சேருமிடத்திற்கான பயண நேரம் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளவும் முடியும்.

பயணிகளுக்கு டிஜிட்டல் பண பரிமாற்றம், 24 மணி நேர பாதுகாப்பு, வசதியான இருக்கைகள் உள்ளிட்ட பல முக்கிய சேவைகள் இதில் வழங்கப்பட உள்ளது. அதிகரித்து வரும் மக்கள் தொகை மற்றும் பெருகி வரும் மக்களின் பயண தேவைகளை எதிர்கொள்ள இது போன்ற சேவைகள் வருவதை வரவேற்று பலரும் சமூக வலைதளங்களில் கருத்து தெரிவிக்கின்றனர்.

## மும்பை சர்வதேச விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்மநபர்

மும்பை, நவ.25

மும்பை சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று ஒரு மின்னஞ்சல் வந்தது. அதில் விமான நிலையத்தின் டெர்மினல் 2வை தகர்க்கப்போவதாகவும், வெடிப்பைத் தடுக்க 48 மணி நேரத்திற்குள் 1 மில்லியன் டாலர்களை பிட்காயினில் தரவேண்டும் என்றும் மர்மநபர் மின்னஞ்சலில் தெரிவித்திருந்தார். மேலும், "உங்கள் விமான நிலையத்திற்கு இது இறுதி எச்சரிக்கை. ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்கள் பிட்காயினுக்கு மாற்றப்படாவிட்டால், 48 மணி நேரத்தில் டெர்மினல் 2 ஐ வெடிக்கச் செய்வோம். மற்றொரு எச்சரிக்கை 24 மணிநேரத்திற்குப் பிறகு இருக்கும்" என மின்னஞ்சலில் கூறப்பட்டு இருந்தது. இதுகுறித்து, விமான நிலைய அதிகாரி ஒருவர் சஹார் காவல் நிலையத்தை அணுகி, மர்மநபர் மீது புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில், இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) பிரிவுகள் 385 (பணம் பறிப்பதற்காக ஒரு நபருக்கு காயம் ஏற்படும் என்ற பயத்தில்) மற்றும் 505 (1) (பி) (அச்சம் அல்லது அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்ட அறிக்கைகள்) கீழ் எப்.ஐ.ஆர். (பொது அல்லது பொது அமைதிக்கு எதிராக) அடையாளம் தெரியாத நபர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது.

# இந்து சமய அறநிலையத்துறை கோவில்கள் சார்பில் 1100வது திருமண கோலாகலம்: முதல்வர் நடத்தி வைத்தார்

சென்னை, நவ.25

இந்து சமய அறநிலையத்துறை கோவில்கள் சார்பில் ஏழை எளியோருக்கு இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு முயற்சியால் இதுவரை 1098 திருமணங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இன்று மயிலாப்பூர் சாய்பாபா கோவில் அருகில் கற்பகாம்பாள் கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் 2 ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்த விழாவுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு தலைமை தாங்கினார். அமைச்சர் கே.என்.நேரு முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை தந்து 2 ஜோடிகளுக்கும் திருமாங்கல்யம் எடுத்து கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். மணமக்களுக்கு மாலைகள் எடுத்து கொடுத்ததும் இரு மணமக்களும் மாலை மாற்றிக்கொண்டனர். அதன் பிறகு மணமகள் கழுத்தில் மணமகன் தாலி கட்டினார்.

மணமக்களுக்கு தாய் வீட்டு சீதனமாக கட்டில், மெத்தை, ஸ்டவ் அடுப்பு, குக்கர், மிக்சி, கிரைண்டர், சில்வர் பாத்திரங்கள், பூஜை தட்டு உள்ளிட்ட பொருட்களும் வழங்கப்பட்டது. இந்து சமய அறநிலையத்துறை பல்வேறு நல்ல பல காரியங்களை செய்து வருகிறது. அதன் அடிப்படையில் இப்போது 1100வது திருமணத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மூலம் நடத்தி நிறைவேற்றி வைத்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஃபார்ச்சூன் ஹோட்டல் திருப்பூரில் அறிமுகமாகியுள்ளது: தமிழ்நாட்டில் உயர்தர ஹோட்டல்கள் கிளையின் 6வது கிளையாகும்







திருப்பூர், நவ25

ITC யின்ஹோட்டல்குழுவின் உறுப்பினரானஃபார்ச்சூன் ஹோட்டல்ஸ், தமிழ்நாட்டின்வரலாற்றுநகரமானதிருப்பூரில்அதன்புதியகிளையைதொடங்குவதாகஅறிவித்துள்ளது.

இந்தியாவின்ஜவுளிமற்றும் பின்னலாடைமையத்தின்மையப்பகுதியில்அமைந்துள்ளஇந்தஹோட்டல்திறப்புநிகழ்வு, பார்ச்சூன்ஹோட்டல்கள்தென்னிந்தியாவில்விரிவாக்கம்செய்வதில்குறிப்பிடத்தக்கமுன்னேற்றத்தைகுறிக்கிறது.

பார்ப்பவர்களைகவரும்வகையிலானவரவேற்புமற்றும் செழுமையானநவீனவசதிகள் மற்றும்அன்பானவிருந்தோம்பல்ஆகியவற்றின்சரியானகலவையாகஃபார்ச்சூன்ஹோட்டல்திகழ்கிறது. பயணிகளின்விவேகமானதேவைகளைபூர்த்திசெய்வதில்முன்னோடியாகபர்ச்சூன்ஓட்டல்திகழ்கிறது. மேலும்இதுநன்குஅமைக்கப்பட்ட விருந்தினர்அறைகள்மற்றும்அனைத்துநவீனவசதிகளுடன்ஒவ்வொருஅறைகளும்உருவாக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்துபார்ச்சூன்ஹோட்டல்நிர்வாகத்தின்மேலாண்இயக்குனர்திருசமீர்எம்சிகூறுகையில், தமிழகத்தின்திருப்பூரில்அமைந்துள்ளஃபார்ச்சின்பார்க்நிறுவனத்தின்64 கூட்டணிகளில்வலுவானமற்றும்உரியபாதுகாப்புஅம்சங்களுடன்உருவாக்கப்பட்டுள்ளதாகஅறிவித்துள்ளார். ஃபார்ச்சூன்பார்க்திருப்பூரில்திறக்கப்பட்டுஇருப்பதன்மூலம்தமிழகத்தில், இது எங்களதுஆறாவதுமைல்கல்லாகஅமைந்துள்ளதாகஎனகுறிப்பிட்டார். வாடிக்கையாளர்களுக்கு, குறிப்பாகவணிகப்பிரிவில்திருப்பூர்போன்றநகரங்களின்தேவையை பூர்த்திசெய்துபொருத்தமாகஅமைக்கப்பட்டுள்ளஇரண்டுமற்றும்மூன்றாம்அடுக்குசந்தைகளில்எங்களது வெற்றிகரமானமுன்னேற்றத்தை தொடர்வதுஉற்சாகமாகஉள்ளதாக தெரிவித்தார். திருப்பூரின்தனித்துவமானவசீகரம், ஒருசெழிப்பானதொழில்துறைமற்றும்வணிகமையமாகஇருப்பதால், வரலாற்றையும் வர்த்தகத்தையும்அதன்எல்லைக்குள்தடையின்றிஒன்றிணைக்கும்பிராந்தியத்தில்எங்கள்விருந்தினர்களின்பல்வேறுதேவைகளைநிவர்த்திசெய்யஅனுமதிக்கிறது.

இதில்விருந்தினர்களைபலவிதமானஉணவுவிருப்பங்களுக்குஏற்பவடிவமைக்கப்பட்டுள்ளது. நம்பமுடியாதஉலகஉணவுவகைகளை கொண்டநாள்முழுவதும்சாப்பிடும் உணவகம், நெப்டியூன்பார்ஒருதேர்ந்தெடுக்கப்பட்டசூழல்மற்றும்புத்துணர்ச்சியூட்டும்காக்டெய்ல்களுடன்வாடிக்கையாளர்களைஅழைக்கிறது. பார்ச்சூன்டெலிஉணவுகள்அப்இனிப்புநிபுல்ஸ்மற்றும் savouries காபி மற்றும்உரையாடல்கள்உடனானஉணவகங்கள், விரைவில்திறக்கவிருக்கும்நட்சத்திரா, அதன்சுற்றுப்புறம்மற்றும்வடிவமைப்பைநிறைவுசெய்யும்மெனுடன்நீலவானத்தின்கீழ்அமர்ந்திருக்கும்சூழலைவழங்கஉள்ளது. திருப்பூர்ஃபார்ச்சூன்பார்க்குக்குவரும்விருந்தினர்கள், அதிநவீனகருவிகளுடன்உடற்பயிற்சிகூடம், மனதுக்குஎல்லையற்றஓய்வளிக்கும்அழகுகலைநிலையம், மற்றும்விரைவில்திறக்கப்படவுள்ளஆச்சர்யம்அளிக்கும்வகையில்அமையஉள்ளநீச்சல்குளம்போன்றவசதிகளின்சிம்பொனியுடன்முழுமையானஆரோக்கியஅனுபவத்தில்ஈடுபடமுடியும். கூடுதலாக, ஹோட்டல்வணிகநிகழ்வுகள்மற்றும்சமூககூட்டங்களைநடத்துவதற்குஒருபிரத்தியேகமுன்செயல்பாடுபகுதியுடன் பல்துறைவிருந்துமற்றும்சந்திப்புஇடங்களைதிறக்கப்படஉள்ளது. அதிநவீனவசதிகள், அதற்குஎனபிரத்தியேககுழு, நல்லஉணவுவிருப்பங்கள்மற்றும்சேவைகளுடன்ஒவ்வொருநிகழ்வையும்மகத்தானவெற்றியாகமாற்றுவதாகஉறுதியளிப்பதாககூறினார்.

திருப்பூரில்பார்ச்சூன்பார்க்தொடங்கும்விழாவில்உரையாற்றியகேபிகேஹோட்டல் பிரைவேட் லிமிடெட்நிர்வாக இயக்குனர் கேபிகேசெல்வராஜ், பார்ச்சூ ன்ஹோட்டல்களுடன்கைகோர்த்துதிருப்பூர்நகருக்குஅவர்களின்சிறப்பானவிருந்தோம்பலை வழங்குவதில்நாங்கள்மகிழ்ச்சிஅடைகிறோம்என்றார். எங்களின்மதிப்புமிக்கவிருந்தினர்களுக்குஎங்களின்பலஉணவுமற்றும்பானவிற்பனைநிலையங்கள் மூலம்இணையற்றசமையல்பயணத்துடன்ஒருசூடானமற்றும்மறக்கமுடியாதஅனுபவத்தை வாடிக்கையாளர்களுக்குவழங்கஆவலுடன்காத்திருக்கிறோம்என்றார். பார்ச்சூன்ஹோ ட்டல்களு டன்எங்கள்தொடர்புஒருநேர்மறையான ஒன்றாகஉள்ளதுஎன்றும்நாங்கள் ஒன்றாகநகரத்தில்ஒருதனித்துவமானஇருப்பைஉருவாக்குவதைநோக்கமாககொண்டுஉள்ளோம்என்றார். தமிழ்நாட்டி ன்ஒருபெரியதொழி ல் நகரமானதிருப்பூர், கோயம்புத்தூரில்இருந்துவெறும் 55 கிலோமீ ட்டர்தொலைவில்உள்ளது.

மேலும்இப்ப குதியில்உ ள்ளமுக்கியதொழில்பூங்காக்கள், உற்பத்திமையங்கள்மற்றும்புகழ்பெற்றகோயில்களுக்குஅருகாமையில்தங்கள் பார்ச்சூன்ஹோட்டல்அமைந்துள்ளது. பார்ச்சூன்பார்க்திருப்பூரைதவிரஃபார்ச்சூன்ஹோட்டல்ஸ் தமிழகத்தில்ஐந்துகூட்டணிகளைக்கொண்டுள்ளதுஎன்றும், அது வேலூர், ஊட்டி, மதுரை, சென்னை மற்றும்ஒசூரில்செயல்பட்டுவருகிறதுஎன்றார்.

பார்ச்சூன்பார்க்ஹோட்டல்லிமிடெட்நிறுவனம்பற்றி:

ஃபார்ச்சூன்பார்க்ஹோட்டல்லிமிடெட்என்பதுஐடிசிலிமிடெட்இன்முழுசொந்தமானதுணைநிறுவனமாகும். மேலும்இதுநாட்டின் 54 நகரங்களில் 64 கையொப்பமிட்டகூட்டணிகள்மற்றும் 4,800 அறைகளைக்கொண்டமுதல்தரமுழுசேவைவணிகமற்றும் ஓய்வுவிடுதிகளின்இந்தியாவின்முன்னணிசங்கிலியாகும். ஃபார்ச்சூன்ஹோட்டல்களின்பிராண்ட்தத்துவமானது, வணிகம்மற்றும்ஓய்வுநேரபயணிகளுக்குசமகாலதங்குமிடவசதிகளை, பொருத்தமான இடங்களில்அதன்பரந்தஅளவிலானதங்குமிடங்கள்மூலம், தனிபயனாக்கப்பட்டசேவைக்கு முக்கியத்துவம்அளிக்கும்நோக்கத்தால்இயக்கப்படுகிறது. வசதியான இடங்கள், சிறந்தஉணவுவகைகள், திறமையானசேவையாளர்கள்மூலம்சேவைஅளித்தல், மற்றும் போட்டிவிலைநிர்ணயம்ஆகியவைஃபார்ச்சூன்ஹோட்டல்சங்கிலியைவிவேகமானவாடிக்கையாளர்களிடம்பிரபலமாகியுள்ளன. பார்ச்சூன், ITC இன்ஹோட்டல்குழுமத்தின்உறுப்பினர்பலதெளிவாகவரையறுக்கப்பட்டதுணைபிராண்டுகளைஉடனடிநினைவுக்குகொண்டுவருகின்றனர். இதனால்விருந்தினர்கள்தங்கள்தேவைகளைசங்கிலியின்சலுகைகளுடன்எளிதாக பொருத்த முடிகிறது. பார்ச்சூன்செலக்ட், பார்ச்சூன்பார்க், பார்ச்சூன்இன்மற்றும்பார்ச்சூன்ரிசார்ட்ஆகியவைஹோட்டல்களின்கீழ்செயல்படும்துணைபிராண்டுகள்ஆகும்.

மேலும்கூடுதல்த கவல்க ளுக்கு: Itchotels.com/fortunehotels



தமிழகமுதல்வரின்வழிகாட்டுதலுக்கிணங்கதிருப்பூர்மாவட்டம்காங்கேயம்வட்டம் சிவன்மலைசுப்பிரமணியசுவாமிதிருக்கோவிலில்இந்துசமயஅறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியை அமைச்சர் சாமிநாதன் தலைமையேற்று திருமணங்களை நடத்தி வைத்தார். உடன் சிவன்மலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உதவி ஆணையர் அன்னக்கொடி உள்ளார்.

# என்கவுண்டரில் சுட்டுக்கொல்லப்பட்ட திருச்சி ரவுடி கொம்பன் உடல் நள்ளிரவில் தகனம்

திருச்சி, நவ.25

திருச்சி சர்க்கார் பாளையம் பனைய குறிச்சியை சேர்ந்தவர் ஜெகன் என்கிற கொம்பன் (வயது 30). ரவுடியான இவர் மீது திருச்சி மட்டுமல்லாமல் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கொலை, கொலை முயற்சி, கட்டப்பஞ்சாயத்து உள்பட 53 வழக்குகள் உள்ளன.

இந்த நிலையில் வழக்குகளில் நீதிமன்றங்களில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த கொம்பனை போலீசார் தேடி வந்தனர். நேற்று முன்தினம் சமயபுரம் அருகே சனமங்கலம் காட்டுப்பகுதிகள் பதுங்கி இருந்த அவரை தனிப் படை போலீஸ் இன்ஸ்பெக்டர் கருணாகரன், சப் இன்ஸ்பெக்டர் வினோத் தலைமையிலான போலீசார் பிடிக்க முயன்றனர்.

அப்போது போலீஸ் மீது தாக்குதல் நடத்திய ரவுடி கொம்பனை போலீசார் துப்பாக்கியால் சுட்டனர். இதில் கொம்பன் ஜெகன் பலியானார். இதையடுத்து பிரேத பரிசோதனைக்காக அவரது உடல் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கொம்பன் ஜெகனின் தாய், தந்தை, மனைவி உள்ளிட்ட குடும்பத்தினரிடம் மாஜிஸ்திரேட்டு ராஜ்குமார் விசாரணை நடத்தினர். பின்னர் கொம்பன் ஜெகனின் உடல் பிரேத பரிசோதனை முடிந்து இரவு 9:45 மணி அளவில் உறவினர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இதையடுத்து அவரது இறுதிச்சடங்கு திருச்சி சர்க்கார் பாளையத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடந்தது. அங்கு உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அவரது உடலுக்கு மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் போலீசாரின் பலத்த பாதுகாப்போடு உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு திருச்சி ஓயாமரி மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. மேலும் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.



இதற்கிடையே ஜெகனின் தாயார் சரஸ்வதி கூறும்போது, எனது மகன் கடந்த 2 ஆண்டுகளாக எந்த தவறும் செய்யாமல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்பாக ஆஜராகி வந்தான். இருப்பினும் போலீசார் அடிக்கடி தொந்தரவு கொடுத்தனர். அவனை ரவுடியாக்கியது போலீசார் தான். அவன் தவறே செய்திருந்தாலும் அவனுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்று கொடுத்திருக்க வேண்டும்.

போலி என்கவுண்டர் மூலம் சுட்டு கொன்றுவிட்டனர். இதற்கு உரிய நீதி விசாரணை நடத்த வேண்டும் என கூறினார். அதே போன்று கொம்பனின் மனைவி ஆர்த்திகா மனித உரிமை ஆணையத்திடம் புகார் அளிப்பதாக தெரிவித்துள்ளார். கள்ளர் முன்னேற்ற சங்கமும் நீதி விசாரணை கோரி உள்ளது.

# திருவண்ணாமலை கிரிவலம் செல்ல உகந்த நேரம்

வேங்கிக்கால், நவ.25

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் அங்குள்ள மகா தீபமலையை சுற்றி கிரிவலம் செல்கின்றனர். ஒவ்வொரு பவுர்ணமி அன்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வது வழக்கம்.



நாளை மறுநாள் கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு சுமார் 5 லட்சம் பக்தர்கள் குவிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி கார்த்திகை மாத பவுர்ணமி நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.58 மணிக்கு தொடங்கி மறுநாள் திங்கள் கிழமை மாலை 3.08 மணிக்கு நிறைவடைகிறது. இது கிரிவலம் செல்ல உகந்த நேரம். மேலும் தீபத் திருவிழாவில் பவுர்ணமியை முன்னிட்டு கோவிலில் தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால் 2 நாட்கள் அமர்வு தரிசனம், சிறப்பு தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருவதாக கோவில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# சூப்பர் மார்க்கெட் உரிமையாளரை தாக்கிய போலீஸ்ஏட்டு: 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு

நாகர்கோவில், நவ.25

ஆரல்வாய்மொழி அருகே ஆவரைகுளம் பகுதியை சேர்ந்தவர் பிரபாகர் (வயது 51). இவர் குமாரபுரம் சந்திப்பில் சூப்பர் மார்க்கெட் நடத்தி வருகிறார்.

சம்பவத்தன்று பிரபாகர் சூப்பர் மார்க்கெட்டில் இருந்தார். அப்போது ஆவரை குளத்தை சேர்ந்த ரவிக்குமார் (45), ராபர்ட் (40) ஆகிய இருவரும் பொருட்கள் வாங்க வந்தனர். அப்போது பிரபாகரிடம் இருவரும் தகராறில் ஈடுபட்டனர். பின்னர் ரவிக்குமார், ராபர்ட் இருவரும் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இந்நிலையில் பிரபாகர் கடையை பூட்டிவிட்டு இரவு மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். குமாரபுரம்கன்னியாகுமரிமெயின் ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது ரவிக்குமார், ராபர்ட் இருவரும் பிரபாகர் மோட்டார் சைக்கிளை தடுத்து நிறுத்தினார்கள்.

பின்னர் அவரிடம் தகராறு செய்ததுடன் மோட்டார் சைக்கிளை காலால் மிதித்து கீழே தள்ளியதுடன் பிரபாகரை கையால் சரமாரியாக தாக்கினார்கள். பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர். காயம் அடைந்த பிரபாகர் அந்த பகுதியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து பிரபாகர் ஆரல்வாய்மொழி போலீசில் புகார் செய்தார். புகாரின் பேரில் ரவிக்குமார், ராபர்ட் மீது ஆரல்வாய் மொழி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இவர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் 341, 294(பி), 329, 506(2) ஐ.பி.சி. ஆகிய நான்கு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ரவிக்குமார் திசையன்விளை போலீஸ் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் 44,781 மாணவ, மாணவிகளுக்கு பட்டம்: கவர்னர் ஆர்.என்.ரவி வழங்கினார்

சேலம், நவ.25

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழகத்தின் பெரியார்கலையரங்கில் நடைபெற்றது. துணைவேந்தர் ஜெகநாதன் வரவேற்று பேசினார்.

விழாவுக்கு தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி தலைமைதாங்கி குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார். திருச்சி தேசிய தொழில்நுட்ப கழக இயக்குனர் அகிலா முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தினார். முனைவர் பட்டம் ஆய்வை நிறைவு செய்த 153 மாணவர்களுக்கும், பெரியார் பல்கலைக்கழக துறைகள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளில் ஆய்வில் நிறைஞர் முதுகலை மற்றும் இளங்கலை பாடங்களில் முதலிடம் பிடித்த 104 மாணவர்களுக்கும் தங்கப் பதக்கத்துடன் பட்ட சான்றிதழ்களை விழா மேடையில் கவர்னர் ஆர்.என்.ரவி வழங்கினார். இதில் பெரியார் பல்கலைக்கழகத்துறைகளில் முதுகலை பாடப்பிரிவில் முதலிடம் பிடித்த 30 மாணவர்களுக்கும்,




இளங்கலை பாடப்பிரிவில் 3 மாணவர்களுக்கும், இணைவு பெற்ற கல்லூரிகளின் முதுகலை பாடப்பிரிவில் 31 மாணவர்களுக்கும், இளநிலை பாடப்பிரிவில் 40 மாணவர்களுக்கும் தங்கப் பதக்கத்துடன் பட்ட சான்றிதழையும் கவர்னர் ஆர்.என்.ரவி வழங்கினார்.

மேலும் சேலம், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள இணைவு பெற்ற கல்லூரிகளை சேர்ந்த 42 ஆயிரத்து 915 மாணவர்களும், பெரியார் பல்கலைக்கழக துறைகளில் படித்த 978 மாணவர்களும், பெரியார் தொலைநிலை கல்வி நிறுவனத்தில் படித்த 631 மாணவர்களும் பட்டங்கள் பெற்றனர். கவர்னர் ஆர்.என்.ரவி பட்டங்களை வழங்கி உறுதி மொழி வாசிக்க அனைத்து மாணவர்களும் பட்டம் பெற்றதற்கான உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் தலைமையில் பதிவாளர் தங்கவேல் உள்படபலர்செய்திருந்தனர்.

தமிழ்நாடு உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி இந்த விழாவில் பங்கேற்று சிறப்பிப்பார் என அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அவர் இந்த விழாவில் பங்கேற்கவில்லை.

விழாவில் பங்கேற்ற மேட்டூர் தொகுதி எம்.எல்.ஏ. பா.ம.க.வை சேர்ந்த சதாசிவம் விழாவில் இருந்து வெளிநடப்பு செய்தார். அப்போதுஅவர்கூறுகையில், சேலம் மாவட்டத்தில் உள்ள எந்த எம்.எல்.ஏ.க்களும் பங்கேற்காததால் தானும் புறக்கணித்ததாக கூறினார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# நொய்யல் ஆற்றில் பனிமலை போல் பொங்கி வழியும் நுரை

திருப்பூர், நவ.25

நொய்யல் ஆறு கோவை மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் உற்பத்தியாகி கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் 165 கி.மீ., தூரம் பயணித்து காவிரியில் கலக்கக் கூடிய ஆறு ஆகும். இந்த ஆறு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் சாக்கடை நீர் கழிவுகளாலும், திருப்பூரின் சாயக்கழிவு நீராலும் மாசடைந்து வந்தது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பிறகு ஆற்றில் சாயக்கழிவு நீர் கலப்பது தடுக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்து வரும் கன மழை காரணமாக நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. புது வெள்ளம் பெருகி நொய்யல் ஆற்றில் வழிந்தோடுகிறது. திருப்பூர் நல்லம்மன் தடுப்பணை பகுதியில் இந்த மழை வெள்ளமானது ஆர்ப்பரித்து பொங்குகிறது. இதனால் நல்லம்மன் கோவில் தண்ணீரில் மூழ்கி வருகிறது. கோவிலுக்கு செல்லக் கூடிய சிறு பாலம் துண்டிக்கப்பட்டு கோவிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.



இந்தநிலையில் நொய்யல் ஆற்றில் நுரை சூழ்ந்து வெண்மையாக பனி மலை போல காணப்படுகிறது. அந்த பகுதி முழுக்க நுரையால் சூழ்ந்து உள்ள நிலையில், ஆற்றங்கரையில் உள்ள சாய, சலவை பட்டறைகள் சுத்திகரிக்காத சாய நீரை ஆற்று வெள்ளத்தில் கலப்பதால் தான் இது போல பெருமளவு நுரை உருவாவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மங்கலம், வெள்ளஞ்செட்டி பாளையம், ஆண்டிபாளையம், பாரப்பாளையம் மற்றும் திருப்பூர் மாநகர பகுதிகளில் உள்ள சாய, சலவைப் பட்டறைகள் நேரடியாக குழாய்களை அமைத்து ஆற்றில் கழிவு நீரை கலப்பதாகவும், மழை வெள்ளம் ஏற்படும் காலங்களில் துளிகூட சுத்தி கரிக்காத சாயக்கழிவு நீரை அப்படியே திறந்து விடுவதால் தான் ஆள் உயரத்துக்கு நுரை ஏற்படுவதாகவும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சாய, சலவைப்பட்டறைகள் நேரடியாக ஆற்றுக்குதண்ணீர்செல்வதற்கு அமைத்துள்ள குழாய்களை அகற்ற வேண்டும் எனவும், தொடர்ச்சியாக சாயக்கழிவு நீர் கலப்பதை கண்காணித்து தடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நெல்லை, தென்காசி, தூத்துக்குடியில் மழை குறைந்த நிலையிலும் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

நெல்லை, நவ.25

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் வடகிழக்கு பருவ மழை காரணமாக கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை வரை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

நேற்று மழை சற்று குறைந்த நிலையில் நெல்லை, டவுன், வண்ணார்பேட்டை, தச்சநல்லூர், பேட்டை, பாளையங்கோட்டை உள்ளிட்ட இடங்களில் இன்று காலை மழை முதல் பெய்து வருகிறது. இதேபோல் திசையன்விளை, பணகுடி, ராதாபுரம், நாங்குநேரி, நம்பியாறு உள்ளிட்ட புறநகர் மாவட்ட பகுதியிலும் மழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று காலை வரை அதிகபட்சமாக சூரன்குடியில் 80 மல்லி மீட்டர் மழை பதிவானது.

இந்நிலையில் பள்ளி வளாகத்தில் மழை நீர் தேங்கி இருந்து வகுப்புகள் நடத்த உகந்த சூழல் இல்லாத நிலை ஏற்பட்டாலோ, அல்லது சில இடங்களில் கனமழை பெய்தாலோ அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் சூழ்நிலைக்கேற்ப முடிவு செய்து பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கலாம் என நெல்லை கலெக்டர் கார்த்திகேயன் உத்தரவிட்டுள்ளார்.

நெல்லை அருகே உள்ள தேவர்குளம்சுற்றுவட்டார பகுதிகளான மேலஇலந்தைகுளம், சுண்டங்குறிச்சி, பன்னீரூத்து, மூவிருந்தாளி, அச்சம்பட்டி, புளியம்பட்டி மற்றும் தென்காசி மாவட்ட பகுதிகளான கரிசல்குளம், களப்பாலங்குளம், மேல நீலிதநல்லூர், குருக்கள்பட்டி, கோ.மருதப்புரம், பனவடலிசத்திரம், கீழநீலிதநல்லூர், நெடுங்குளம், கொக்குகுளம், சாயமலை, வலசை ஆகிய பகுதிகளில் தொடர் மழை காரணமாக பல்வேறு குளங்கள் நிரம்பி கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



மூவிருந்தாளி கிராமத்தில் உள்ள பெரிய குளம் நிரம்பி மறுகால் சென்றது. இதில் இருந்து வெளியேறிய தண்ணீர் அதிகமாக சென்றதால் வெள்ளம் ஊருக்குள் புகுந்தது. இதனால் அங்குள்ள சுமார் 200 வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது. 6 வீடுகள் சேதமடைந்து உள்ளது.

மேலும் பல்வேறு குளங்களில் இருந்து வெளியேறிய காட்டாற்று வெள்ளம் மேலஇலந்தை குளம் பகுதியில் உள்ள தரைப்பாலத்தை மூழ்கடித்தபடி சென்றது. இதன் காரணமாக அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் நெல்லை சந்திப்பு பஸ்நிலையம், டவுன், மேலப் பாளையம்குறிச்சி, பாளையங்கோட்டையில் சாலைகளில் தண்ணீர் தேங்கி உள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் பலத்த மழையால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி கிடக்கிறது. ஹூர்தம்மாள்புரம், ஸ்டேட் வங்கி காலனி, கலைஞர் நகர், பால் பாண்டி நகர், ராஜீவ் நகர் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் வீடுகளை சூழ்ந்து உள்ளது.

திரு.வி.க. நகர், இந்திரா நகர் பகுதிகளிலும் மழை நீர் தேங்கி உள்ளது. அந்த பகுதியில் ஒரு சில வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது. இதனால் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் மோட்டார்கள் மூலம் மழைநீரை அகற்றும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. தூத்துக்குடி கீழூர் ரெயில் நிலையத்தில் மழைநீர் தேங்கியது. தண்டவாளம் மழைநீரில் மூழ்கி இருந்தது.

கயத்தாறு திருமங்களக்குறிச்சி பஞ்சாயத்தில் பெரியசாமிபுரம் கிராமத்தில் விவசாயிகள் சுமார் 300 மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் மக்காசோளப்பயிர் பயிரிட்டுள்ளனர். இங்கு பூ பூத்துள்ள தொடர் மழையில் மக்காசோளப்பயிர்களில் மழைநீர் இரண்டு அடி உயரம் தேங்கிய நிலையில் இப்பகுதியில் நேற்று மாலையில் சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது. இதில் 250 ஏக்கர் மக்காச்சோளம், 50 ஏக்கர் உளுந்து பயிர் ஆகியவை நொடிந்து விழுந்தது.

கனமழையால் புதியம்புத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மழை நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் நோயாளிகள் அவதியடைந்து வருவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். எனவே உடனடியாக அதனை அகற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்ட நிர்வாகங்கள், மாநகராட்சி, நகராட்சி சார்பில் தேங்கிய இடங்களில் மழைநீரை அகற்றும் பணி நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

மேற்கு தொடர்ச்சி மழை காரணமாக நெல்லை மாவட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. பாபநாசம் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 844.155 கன அடியாக அதிகரித்து உள்ளது. அணையில் இருந்து 504.75 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. 143 கொள்ளளவு கொண்ட அணையில் இன்று 105.75 அடியாக உயர்ந்து உள்ளது. அதேபோல் மணிமுத்தாறு அணையின் நீர் மட்டம் 72.35 அடியில் இருந்து நேற்று 73.45 அடியாவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 118.04 உள்ளது.

தென்காசி மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக மெயினருவி, ஐந்தருவி, பழையகுற்றாலம் உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து விழுந்து வருகிறது. இதனால் இன்று ஏராளமான சுற்றுலா பயணிகளும், ஐயப்ப பக்தர்களும் அருவிகளில் குளிக்க திரண்டனர்.

# போடியில் கனமழை: வீடுகள், பயிர்களை சூழ்ந்த நீரால் மக்கள் அவதி

மேலசொக்கநாதபுரம், நவ.25

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக முக்கிய அணைகள், கண்மாய்கள், குளங்கள் நிரம்பியது. இதனால் விவசாய பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

ஆற்றங்கரையோரமுள்ள பகுதிகளில் தண்ணீர் அதிக அளவு சென்றதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகினர். போடி விசுவாசபுரம் பகுதியில் தென்னை, வாழை, செவ்வந்திப்பூ உள்ளிட்ட விவசாயம் அதிக அளவு நடைபெற்று வருகிறது. இந்த வயல்களில் மழை நீர் தேங்கியதால் விவசாயிகள் மிகுந்த சிரமம் அடைந்தனர்.



பயிர்கள் அனைத்தும் மழையில் நனைந்து வீணாகி விட்டதால் ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் செலவு செய்து பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மேலும் மேலசொக்கநாதபுரம் பகுதியில் குடியிருப்பு பகுதிகளை மழை நீர் சூழ்ந்தது. இதனால் வீடுகளில் இருந்த மக்கள் வெளியேற முடியாமல் மிகுந்த சிரமம் அடைந்தனர். நேற்று மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்ட நிலையில் இன்று அதுபோன்ற அறிவிப்பு வெளியாகவில்லை. இதனால் மாணவ மாணவிகள் கல்வி நிலையங்களுக்கு செல்ல முடியாமல் மிகுந்த சிரமம் அடைந்தனர். குடியிருப்புகளை சூழ்ந்த மழை நீரில் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார சீர்கேடான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர். மேலும் பெரியகுளம் அருகே நெல் வயலுக்குள் தண்ணீர் புகுந்ததில் 20 ஏக்கர் மதிப்பில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. கீழவடகரை பகுதியில் உள்ள ஆண்டிக்குளத்தில் இருந்து வெளியேறிய தண்ணீர் வயல்களை சூழ்ந்ததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். எனவே அதிகாரிகள் பார்வையிட்டு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இதே போல் தேனி முல்லை நகர் காலனியிலும் தண்ணீர் அதிக அளவு குடியிருப்புகளை தேங்கியதால் அப்பகுதி மக்கள் அவதிக்குள்ளாயினர்.

# ஜாம்புவானோடை தர்காவில் பெரிய கந்தூரி விழா கோலாகலம்



திருத்துறைப்பூண்டி, நவ.25

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அடுத்த ஜாம்புவானோடையில் பிரசித்திபெற்ற சேக்தாவூது ஆண்டவர் தர்கா உள்ளது. இந்த தர்காவிற்கு அனைத்து சமுதாயத்தினரும் வந்து செல்வதால் மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இங்கு ஆண்டுதோறும் பெரியகந்தூரி விழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டுக்கான 722ம் ஆண்டு பெரிய கந்தூரி விழா கடந்த 14ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர்.

விழாவின் முக்கிய நிகழ்வான புனித சந்தனக்கூடு ஊர்வலம் இன்று அதிகாலை நடைபெற்றது. முன்னதாக நேற்று இரவு 10.30 டிரஸ்டிகள் இல்லத்தில் இருந்து சந்தனங்கள் நிரப்பிய குடங்கள் தர்காவிற்கு எடுத்து செல்லும் நிகழ்ச்சி சிறப்பு பிரார்த்தனையுடன் தொடங்கி நடைபெற்றது. பின்னர், நள்ளிரவு 1 மணிக்கு சிறப்பு பிரார்த்தனை நடைபெற்று, 2.30 மணிக்கு தர்கா முதன்மை அறங்காவலர்

எஸ்.எஸ்.பாக்கர் அலி சாகிப்தலைமையில் டிரஸ்டிகள் புனித சந்தனக்குடத்தை தலையில் சுமந்து வந்து கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்ட சந்தனக்கூட்டில் வைத்தனர். தொடர்ந்து, வானவேடிக்கை, மேள தாளங்கள் முழங்க சந்தனக்கூடு ஊர்வலம் தொடங்கியது.

சந்தனக்கூடு ஊர்வலம் அடக்கஸ்தலம் சென்று, பின்னர் ஆற்றங்கரை பாவா தர்கா, அம்மா தர்கா பகுதிக்கு வந்தடைந்து, மீண்டும் தர்காவை 3 முறை சுற்றியது. அப்போது அங்கு கூடியிருந்த பக்தர்கள் பூக்களை சந்தனக்கூடு மீது தூவி பிராத்தனை செய்தனர்.

பின்னர் அதி காலை 5 மணிக்கு சந்தன கூட்டில் இருந்து சந்தன குடங்கள் தர்காவிற்கு எடுத்து வரப்பட்டு, ஷேக்தாவூது ஆண்டவர் சமாதிக்கு புனித சந்தனம் பூசும் நிகழ்ச்சி நடந்தது.

இதில் இஸ்லாமியர்கள் மட்டுமின்றி, மாவட்டம், வெளிமாநிலங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் மதநல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாய் கலந்து கொண்டனர். விழாவை யொட்டி இன்று (வெள்ளிக்கிழமை) உள்ளூர் விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் சாருஸ்ரீ உத்தரவிட்டார்.

பாதுகாப்பு பணியில் திருவாரூர் ஏ.டி.எஸ்.பி. ஈஸ்வரன், முத்துப்பேட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு விவேகானந்தம், இன்ஸ்பெக்டர்ராஜேஷ் தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர். மேலும், மாவட்ட நிர்வாகம் சார்பில் முன்னேற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டு இருந்தது.

தொடர்ந்து, இன்று மாலை உள்ளூர் மக்களுக்காக அந்திக்கூடு ஊர்வலம் நடைபெற உள்ளது. வருகிற 27ந்தேதி கொடி இறக்கப்பட்டு கந்தூரி விழா முடிவடைகிறது. மதநல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாய் நடந்த இந்த கந்தூரி விழாவால் நகரமே விழாக்கோலம் பூண்டது.

# கோத்தகிரி–குன்னூரில் மழை: நிலச்சரிவால் சாலைகள் சேதம், 50 வீடுகள் இடிந்தன

அருவங்காடு, நவ.25

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டி தீர்த்து வருகிறது.

மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலுமே கனமழை பெய்து வருவதால் பல இடங்களில் மண் சரிவு, பாறைகள் விழுந்து பாதிப்பு, மரங்கள் முறிந்து விழுவது என பாதிப்புகள் தொடர்ந்து வருகிறது. மாவட்டத்தில் உள்ள ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் கடந்த 2 நாட்களாக இடைவிடாது மழை பெய்து வருகிறது. இரவு, பகலும் பாராமல் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கையே முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த கனமழையால் மேட்டுப்பாளையம் குன்னூர், மேட்டுப்பாளையம் கோத்தகிரி சாலையில் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. நடுரோட்டில் மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் இந்த சாலைகளில் 10 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சீரமைப்பு பணி முடிந்து நேற்று மதியத்திற்கு பிறகே போக்குவரத்து தொடங்கியது. இதனால் அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் பரிதவிப்புக்குள்ளானார்கள்

குன்னூர் முத்தாலம்மன்பேட்டை, வண்டிச்சோலை, எம்.ஜி.ஆர் நகர், மற்றும் உமரி காட்டேஜ் உள்பட பல இடங்களில் குடியிருப்புகள் சேதமடைந்தது. அந்த பகுதிகளில் உள்ள சொகுசு பங்களாக்கள் மற்றும் வீடுகளுக்குள்ளும் மழைநீருடன் கழிவுநீரும் புகுந்தது.

இதனால் வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கி மிதந்து கொண்டிருந்தன. தண்ணீர் புகுந்ததால் மக்கள் விடிய, விடிய தூங்க முடியாமல் மிகவும் சிரமத்திற்குள்ளாகினர்.

குடியிருப்பு பகுதிகளில் புகுந்துள்ள கழிவு நீர் மற்றும் மழை நீரினை அகற்றும் பணியில் 50க்கும் மேற்பட்ட நகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

குன்னூர் அம்மன் நகர் பகுதியில் அதிகாலையில் ஒரு வீட்டின் மீது பாறை விழுந்து அந்த வீடு சேதம் அடைந்தது. அதிர்ஷ்டவசமாக வீட்டில் இருந்த 4 பேரும் உயிர் தப்பினர்.

குன்னூர் பகுதியில் பெய்த தொடர் மழைக்கு நகரம் மற்றும் கிராம பகுதிகளில் 50 வீடுகள் சேதம் அடைந்துள்ளது. அபாயகரமான குடியிருப்பு பகுதிகள் மற்றும் பள்ளத்தாக்கு பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும் என மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும் மலைப்பாதை மற்றும் மலை சரிவுகளில் ஈரத்தன்மை அதிகரித்து வருவதால் மண் சரிவின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எனவே பொது மக்கள் மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும், மலைப்பாதைகளில் பயணிக்கும் சுற்றுலா பயணிகள் மற்றும் வாகன ஓட்டிகள் பாதுகாப்பாக சென்று வர வேண்டும். அபாயகரமான இடத்தில் வாகனங்கள் நிறுத்த வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து மக்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்பு குழுவினரும் ஈடுபட்டுள்ளனர். குன்னூர் நகரப் பகுதியில் உள்ள 30 வார்டுகளில் 13 வார்டுகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடைகோடி கிராமமான கீழ்கோத்தகிரியைஅடுத்து கரிக்கையூர் உள்ளது. இங்கு பெய்த கனமழைக்கு, கரிக்கையூர் செல்லும் சாலையில் மிகப்பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் அந்த சாலை முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 25 மேற்பட்ட பழங்குடியினகிராம மக்கள்சிரமம் அடைந்துள்ளனர். சாலை துண்டிக்கப்பட்டதால் 25க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு 15 கிலோ மீட்டர் சுற்றியே நகர பகுதிக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இதுபற்றிய தகவல் அறிந்ததும் மாவட்ட கலெக்டர் அருணா, சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். மேலும் அந்த பகுதியில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்டத்தில் அதிகபட்சமாக குன்னூரில் 8.7 செ.மீ மழை பதிவானது. இன்று மழை சற்று குறைந்துள்ளதை அடுத்து குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் சீரமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது

# இன்றும் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை: குமரியில் மேலும் 13 வீடுகள் இடிந்தது



நாகர்கோவில், நவ.25

குமரி மாவட்டத்தில் கொட்டி தீர்த்த கனமழையால் மாவட்டம் முழுவதும் குளுகுளு சீசன் நிலவி வருகிறது. தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு, மாம்பழத்துறையாறு, முக்கடல் அணைகள் முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வழிகிறது.

2000க்கு மேற்பட்ட பாசன குளங்களும் நிரம்பி உள்ளதால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணைகள் மற்றும் பாசன குளங்களின் நீர்மட்டத்தை கண்காணித்து வருகிறார்கள். தக்கலை, மாம்பழத்துறையாறு, குருந்தன்கோடு, முள்ளங்கினாவிளை, சிற்றாறு பகுதிகளில் நேற்று இரவும் பரவலாக மழை பெய்தது. நாகர்கோவிலில் இன்று காலையில் வானத்தில் கருமேகங்கள் திரண்டு காணப்பட்டது. அதன் பிறகு மழை பெய்யத்தொடங்கியது.

இதனால் பள்ளி சென்ற மாணவ மாணவிகள் குடைபிடித்தவாறு பள்ளிக்கு சென்றனர். தக்கலை, திருவட்டார், இரணியல் மற்றும் அதன் புறநகர் பகுதிகளிலும் காலை முதலே மழை பெய்து வருகிறது. மலையோர பகுதியான பாலமோர் பகுதியிலும் மழை நீடித்து வருவதால் அணைகளுக்கு மிதமான அளவு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பேச்சிப்பாறை, சிற்றாறு, மாம்பழத்துறையாறுஅணைகளில்இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில் இன்று பெருஞ்சாணி அணையில் இருந்தும் உபரிநீர் திறக்கப்பட்டுள்ளது.

4 அணைகளில் இருந்தும் உபரிநீர் வெளியேற்றப்படுவதால் குழித்துறை தாமிரபரணி ஆறு, கோதையாறுகளில் வெள்ளம் கரைபுரண்டுஓடுகிறது. கோதையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக திற்பரப்பு அருவியில் தொடர்ந்து தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. அங்குள்ள சிறுவர் பூங்காவை மூழ்கடித்து தண்ணீர் செல்வதால் அருவியில் குளிப்பதற்கு இன்று 6வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி நிர்வாகம் சார்பில் அதற்கான அறிவிப்பு அந்த பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. வள்ளியாறு, பரளியாறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஆறுகளிலும், சானல்களிலும் தண்ணீர் கரைபுரண்டு ஓடுவதால் தாழ்வான பகுதிகளில் உள்ள விளைநிலங்களை சூழ்ந்தது. திக்குறிச்சி பகுதியில் விவசாய நிலங்களை மழைநீர் சூழ்ந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வாழை, மரவள்ளி கிழங்கு, காய்கறி பயிர்களை தண்ணீர் சூழ்ந்துள்ளது. முன்சிறை பகுதியில் குடியிருப்புகளையும் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

மழைக்கு நேற்று ஒரே நாளில் 13 வீடுகள் இடிந்து விழுந்துள்ளது. அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் ஒரு வீடும், கல்குளம் தாலுகாவில் 2 வீடுகளும், விளவங்கோடு தாலுகாவில் 6 வீடுகளும், கிள்ளியூர்தாலுகாவில் 4 வீடுகளும் மழைக்கு இடிந்து விழுந்தது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. உதயகிரி கோட்டை பூங்காவில் தேங்கி இருந்த தண்ணீர் படிப்படியாக குறைய தொடங்கி உள்ளது.

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் இன்று காலை 44.02 அடியாக உள்ளது. அணைக்கு 611 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 301 கன அடி தண்ணீர் மதகுகள் வழியாகவும், 509 கன அடி தண்ணீர் உபரிநீராகவும் வெளியேற்றப்படுகிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 73.46 அடியாக உள்ளது. அணைக்கு 586 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 400 கன அடி தண்ணீர் மதகுகள் வழியாகவும், 300 கன அடி தண்ணீர் உபரி நீராகவும் வெளியேற்றப்படுகிறது.

சிற்றாறு 1 அணை நீர்மட்டம் 16.73 அடியாக உள்ளது. அணைக்கு 526 கன அடிதண்ணீர்வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 100 கன அடி தண்ணீர் மதகுகள் வழியாகவும், 536 கன அடி தண்ணீர் உபரிநீராகவும் வெளியேற்றப்பட்டு வருகிறது. மாம்பழத்துறையாறு அணை முழு கொள்ளளவான 54.12 அடியை எட்டி நிரம்பி வழிகிறது. அணைக்கு வரக்கூடிய தண்ணீர் உபரிநீராக வெளியேற்றப்பட்டு வருகிறது. 52 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கும் நிலையில் 52 கன அடி தண்ணீரை உபரிநீராக வெளியேற்றி வருகிறார்கள்.

முக்கடல் அணையின் நீர்மட்டம் 25 அடி எட்டி நிரம்பி வழிகிறது. அணையிலிருந்து நாகர்கோவில் நகர மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.




மாவட்ட கல்கெடர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம், இணை இயக்குநர் (வேளாண்மை) மாரியப்பன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணவேணி ஆகியோர் உள்ளனர்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை தலைமை ஆசிரியரை தாக்கிய பெற்றோர்




ராஜபாளையம், நவ.25

ராஜபாளையத்தில் காலநிலை மாற்றமும் யானைகளும் என்ற தலைப்பில் யானைகள் திருவிழா நடைபெற்றது. ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கப் பாண்டியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஓவிய போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களை வழங்கினார்.

கோயம்புத்தூர், பொள்ளாச்சி உள்பட 5 ஊர்களில் நடத்தப்பட்டு இறுதியாக ராஜபாளை யத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் தங்க பாண்டியன் எம்.எல்.ஏ.விடம் நினைவு சுழற் சின்னம் (செங்கோல்) வழங்கப்பட்டது. அதனை முதல்அமைச்சரின் பார்வைக்கு அவர் அனுப்பி வைத்தார்.

இதில் தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. பேசியதாவது:

இயற்கை வளங்களை பாதுகாத்து நமது பாரம்பரிய விலங்கான யானைகளை பாதுகாப்பது அனைவருடைய கடைமையாகும். ராஜபாளையம் தொகுதி மக்கள் குறிப்பாக பெண்கள் ஓட்டுனர் உரிமம் பெறு வதற்கு வசதியாக ராஜபாளையம் தொகுதிக்கு தனியாக புதிய வட்டார போக்குவரத்து கிளை அலுவலகம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. ராஜபாளையம் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப் படும் பணிகள் மருத்துவ மனையில் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

ராம்கோ குருப் சேர்மன் பி.ஆர்.வெங்கட்ராமராஜாவின் துணைவியார் நிர்மலா ராஜபாளையம் தொகுதி வளர்ச்சிக்கு ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு நல்லபல திட்டங்களை செயல் படுத்திக் கொண்டு வரு கிறார். அவருக்கு தொகுதி மக்கள் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எப்பொழுதும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த கூட்டத்தில் ராம்கோ குருப் சேர்மன் துணைவியார் நிர்மலா, நகர்மன்றதலைவிபவித்ரா ஷியாம், நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்ட ராஜா, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சுமதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வனப்பகுதிக்குள் விரட்டப்பட்ட நிலையில் மீண்டும் சானமாவு பகுதியில் முகாமிட்ட யானைகள் கூட்டம்



ஓசூர்: நவ.25

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக்கோட்டத்தில் காவிரி வடக்கு காவிரி தெற்கு என இரு வன உயிரின சரணாலயங்கள் உள்ளது.

இந்த வன உயிரியல் பூங்காவிற்கு ஆண்டு தோறும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கர்நாடக மாநிலம் பன்னர்கட்டா உயிரியல் பூங்காவிலிருந்து, 200க்கும் மேற்பட்ட யானைகள் உணவு தேடி வருவது வழக்கம்.

இந்த ஆண்டு யானைகள் அதன் வலசை சீசனுக்கு முன்னரே கடந்த மாதம் முதல் கர்நாடக மாநிலம் பன்னர்கட்டா உயிரியல் பூங்காவிலிருந்து 50க்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக ஜவளகிரி, தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை வழியாக ஓசூர் அடுத்த சானமாவு வனப்பகுதியில் முகாமிட்டன.

இந்த தகவல் அறிந்த வனத்துறையினர், யானைகளின் நடமாட்டம் குறித்து சானமாவு, சினிகிரிபள்ளி கொம்மேபள்ளி, பீர்ஜேப் பள்ளி, ராமாபுரம், ஆழியாளம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும் காலை நேரங்களில் கிராம மக்கள் வயல்வெளிகள் மற்றும் மற்ற பணிகளில் ஈடுபட்டிருந்ததால் நேற்று மாலை யானைகளை விரட்ட பட்டாசு வெடித்தும், மேளம் எழுப்பி யானைகளை விரட்ட முயன்றனர்.

ஆனால், சினிகிரிபள்ளி வரை சென்ற யானைகள் மீண்டும் சானமாவு பகுதிக்கே வந்ததால் வனத்துறையினரின் முயற்சி தோல்வியில் முடிந்தது. எனவே, இன்று மாலை மீண்டும் யானைகளை விரட்டும் பணியில் ஈடுபடுவதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை தலைமை ஆசிரியரை தாக்கிய பெற்றோர்

ஒட்டன்சத்திரம், நவ.25

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள கொசவபட்டியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் சுமார் 50 மாணவமாணவிகள் படித்து வருகின்றனர். இந்த பள்ளியில் தலைமை ஆசிரியராக முருகன் (வயது 51) என்பவர் பணிபுரிந்து வருகிறார். பள்ளியில் படிக்கும் மாணவிகளுக்குதலைமை ஆசிரியர் முருகன் அடிக்கடி பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளதாக தெரிகிறது.

இது குறித்து மாணவிகள் தங்கள் பெற்றோரிடம் தெரிவித்தனர். இதைக் கேட்டு ஆத்திரமடைந்த மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் ஒன்று திரண்டு பள்ளிக்குவந்தனர். அங்கிருந்த தலைமை ஆசிரியர் முருகனை சரமாரியாக தாக்கினர். இது குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

தலைமை ஆசிரியரை சக ஆசிரியர்கள் மீட்டு வேறு ஒரு அறைக்கு அழைத்துச் சென்றனர்.



பின்னர் இது குறித்து அம்பிளிக்கை போலீசில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் தலைமை ஆசிரியரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். அவர் மீது வழக்கு பதிவு செய்து துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இல்லையெனில் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப மாட்டோம் எனவும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தால் அரசு பள்ளியில் பரபரப்பு ஏற்பட்டது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 25.11.2023



## மன்சூர் அலிகானின் மன்னிப்பை ஏற்றார் திரிஷா

திரிஷா பற்றி நடிகர் மன்சூர்அலிகான் பேசிய ஆபாச பேச்சுசர்ச்சையாகி திரையுலகில் கடந்த சில தினங்களாக பரபரப்பாகி வந்தது. மன்சூர்அலிகான்மீது போலீசாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு ஆயிரம் விளக்கு போலீஸ் நிலையத்தில் அவர் நேரில் ஆஜராகி விளக்கமளித்தார்.

இதையடுத்து மன்சூர் அலிகான் இன்று திரிஷா விடம் மன்னிப்புகேட்டுஅறிக்கைஒன்றைவெளியிட்டிருந்தார். அதில், "ஆம்!! அடக்க நினைத்தால் அடங்கமறு!! இப்ப சொல்கிறேன். என்னை மன்னித்துவிடு! ஒரு வாரமாக நடந்த கத்தியின்றி ரத்தமின்றி போரில் நான் வெற்றி? பெற்றுவிட்டேன்.

எனது சக திரைநாயகி திரிஷாவே என்னை மன்னித்துவிடு! இல்லறமாம் நல்லறத்தில் நின் மாங்கல்யம் தேங்காய் தட்டில் வலம்வரும்போது நான் ஆசிர்வதிக்கும் பாக்கியத்தை இறைவன் தந்தருள்வானாக!! " என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், நடிகை திரிஷா தனது சமூக வலைதளத்தில், "தவறு செய்பவன் மனிதன். அதை மன்னிப்பவன் தெய்வம்" என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு ரசிகர்கள் திரிஷா, மன்சூர் அலிகானை மன்னித்துவிட்டதாக கமெண்ட் செய்து வருகின்றனர்.

## அஜர்பைஜான் நாட்டிலிருந்து அதிரடியாக சென்னை திரும்பிய அஜித்.. ஏன் தெரியுமா?

இயக்குனர் மகிழ் திருமேனி இயக்கும் திரைப்படம் 'விடாமுயற்சி'. இப்படத்தில் அஜித் கதாநாயகனாக நடிக்கிறார். லைகாநிறுவனம்தயாரிக்கும்இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படம் ஹாலிவுட் தரத்தில் உருவாக்கப்படவுள்ளதால் படப்பிடிப்பு முழுவதும் அஜர்பைஜான் நாட்டிலே நடைபெறவுள்ளதாக கூறப்படுகிறது.

இப்படத்தின் படப்பிடிப்பு தள புகைப்படங்கள் சமீபத்தில் வெளியானது. இந்நிலையில், நடிகர் அஜித் சென்னை திரும்பியுள்ளார். அதாவது, 'விடாமுயற்சி' படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதால் அஜித் சென்னை திரும்பியுள்ளதாக கூறப்படுகிறது. இவர் சென்னை விமான நிலையத்தில் இருந்து வெளியேறும் வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.





## எங்களால் ஆன முயற்சிகளை செய்தோம் வருத்தத்தில் கவுதம் மேனன்

விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். கதாநாயகியாக ரீத்துவர்மா நடித்துள்ளார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பணிகள் 2017ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 2018ஆம் ஆண்டில் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது. இதையடுத்து சமீபத்தில் இப்படம் இன்று (நவம்பர் 24) ரிலீஸாக உள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

இதற்கிடையே, சூப்பர் ஸ்டார் என்ற படத்தை இயக்க கவுதம் மேனன், ஆல் இன் பிட்சர்ஸ் நிறுவனத்திடம் ரூ.2.40 கோடியை பெற்றுள்ளதாகவும், ஆனால், படத்தையும் முடிக்கவில்லை பணத்தையும் திருப்பித் தரவில்லை என அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

இதையடுத்து, "ஆல் இன் பிட்சர்ஸ் நிறுவனத்திடம் வாங்கிய ரூ. 2 கோடியை இன்று காலை 10.30 மணிக்குள் திரும்ப அளிக்க வேண்டும் அவ்வாறு திரும்ப வழங்கவில்லை என்றால் துருவ நட்சத்திரம் படத்தை வெளியிடக்கூடாது" என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், இயக்குனர் கவுதம் மேனன் ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டு சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "மன்னிக்கவும்.

இன்று 'துருவநட்சத்திரம்' படத்தைதிரைக்குகொண்டு வரமுடியவில்லை. நாங்கள் எங்களால் ஆன முயற்சிகளைசெய்தோம். ஆனால் எங்களுக்கு இன்னும் ஓரிரு நாட்கள் தேவைப்படுவது போல தெரிகிறது. உலகம் முழுக்க, அட்வான்ஸ் புக்கிங் மற்றும் முறையான திரைகள் வழியாக அனைவருக்கும் நல்ல அனுபவத்தை தருவோம் என்று நம்புகிறேன். படத்துக்கு கிடைக்கும்ஆதரவும் மகிழ்ச்சியும், எங்களை தொடர்ந்து இயங்கவும் வைத்தது. இன்னும் கொஞ்ச நாட்கள்தான். நாங்கள் வருகிறோம்" இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



## உங்க அன்புக்கு கடமைப்பட்டிருக்கேன்.. வைரலாகும் சூர்யாவின் உருக்கமான பதிவு

இயக்குனர் சிவா இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் திரைப்படம் 'கங்குவா'. ஸ்டுடியோ கிரீன் மற்றும் யு.வி. கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 3டி முறையில் சரித்திர படமாக உருவாகும் கங்குவா 10 மொழிகளில் வெளியாக இருக்கிறது. 'கங்குவா' திரைப்படத்தின்பர்ஸ்ட்லுக்போஸ்டர்மற்றும்மோஷன் போஸ்டரை படக்குழு வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்தது. இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

'கங்குவா' படத்தின் சண்டைக்காட்சிகள் படமாக்கும் போது, நடிகர் சூர்யா விபத்தில் சிக்கினார். இந்த விபத்தில் சூர்யாவின் தோள்பட்டையில் லேசானகாயம் ஏற்பட்டதாககூறப்படுகிறது. இதையடுத்துபடப்பிடிப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக நசரத் பேட்டை போலீசார் நேரில் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், விபத்துக்கு பிறகு நடிகர் சூர்யா தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், "அன்பார்ந்த நண்பர்கள், நலம் விரும்பிகள் மற்றும் அன்பான ரசிகர்களுக்கு, சீக்கிரம் குணமடைய வாழ்த்தும் குறுந்தகவல்கள் அனைத்திற்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது சிறப்பாக உணர்கிறேன்.. உங்களின் அன்புக்கு எப்போதும் நான் கடமைப்பட்டுள்ளேன்," என்று தெரிவித்துள்ளார்.



## 21 வருடங்களுக்கு பிறகு ஒரே இடத்தில் சந்தித்து கொண்ட கமல்ஹாசன் – ரஜினிகாந்த்



இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'இந்தியன் 2'. லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் மற்றும் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரிப்பில் உருவாகி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் உள்ள பிரசாத் ஸ்டுடியோ அரங்கில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அருகில் இருக்கும் மற்றொரு அரங்கில் நடிகர்ரஜினிகாந்த்நடிப்பில், இயக்குனர் த.செ.ஞானவேல் இயக்கத்தில் உருவாகிவரும் 'தலைவர்170' படத்தின் படப்பிடிப்பும்அங்குநடைபெறுகிறது.

கமல்ஹாசனின் இந்தியன் 2 படப்பிடிப்பு நடப்பதை அறிந்த ரஜினிகாந்த், இந்தியன் 2 ஷூட்டிங் ஸ்பாட்டிற்கு கமல்ஹாசனை சந்திக்க வருவதாக தெரிவித்துள்ளார். இதனையறிந்த கமல்ஹாசன் "என் நண்பனைச்சந்திக்கநானேவருகிறேன்" என காலை 8 மணிக்கே உடனடியாக தலைவர் 170 ஷூட்டிங் ஸ்பாட்டிற்கு விசிட் அடித்து ரஜினிகாந்திற்கு சர்ப்ரைஸ் கொடுத்துள்ளார். கமல்ஹாசனை கண்ட ரஜினிகாந்த் மகிழ்ச்சியில், அவரை கட்டித்தழுவிக் கொண்டார்.

இருவரும் தங்கள் அன்பை பரிமாறிக்கொண்டனர்.

இந்தியத் திரையுலகின் மாபெரும் உச்ச நட்சத்திரங்களின் இந்த நட்பும், அவர்களுக்கிடையேயான அன்பும், படப்பிடிப்பில் இருந்தவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. முன்னதாக பாபா, பஞ்சதந்திரம் படங்களின் ஷூட்டிங் இதே இடத்தில் நடைபெற்ற போது இருவரும் சந்தித்துக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது 21 வருடங்களுக்கு பிறகு மீண்டும் இருவரும் ஒரே படப்பிடிப்பு தளத்தில் சந்தித்துள்ளனர்.

## ஹீரோவான விஜய் சேதுபதி மகன்




நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம், சூது கவ்வும், இதற்கு தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா, நானும் ரவுடி தான் உள்ளிட்ட பல படங்களில்நடித்துரசிகர்களை கவர்ந்த விஜய் சேதுபதி, விக்ரம் படத்தில் நடித்து பலரின் பாரா ட்டு க்க ளை பெற்றார். இவர் தற்போது தமிழ் மட்டு மல்லாது மலையாளம்,இந்தி,தெலுங்கு உள்ளிட்ட பல மொழி படங்களில் நடித்து வருகிறார்.

இவரது மகன் சூர்யா கதாநாயகனாக அறிமுகமாகியுள்ளார்.

இயக்குனர் அனல் அரசு இயக்கத்தில் இவர் நடிக்கும் திரைப்படம் 'ஃபீனிக்ஸ் வீழான்'. பிரேவ் மேன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு இன்று பூஜையுடன் தொடங்கியுள்ளது.

இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. விஜய் சேதுபதியின் 'நானும் ரவுடி தான்', 'சிந்துபாத்' படங்களில் சூர்யா நடித்திருந்ததாக கூறப்படுகிறது.

## உலக கோப்பை மீது கால் வைத்தது மனதை காயப்படுத்தியது... முகமது சமி





இந்தியாவில் நடந்த உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா சாம்பியன் பட்டம் வென்றது. இறுதிப் போட்டியில் இந்தியாவை தோற்கடித்தது.

இதற்கிடையே உலக கோப்பை மீது ஆஸ்திரேலிய வீரர் மிட்செல் மார்ஷ் கால் வைத்திருந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வெளியானது. இதற்கு பலர் கண்டனம், அதிருப்தி தெரிவித்தனர். இந்த நிலையில் இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் முகமது சமி கூறியதாவது:

உலக கோப்பை மீது ஆஸ்திரேலிய வீரர் தனது கால்களை வைத்திருந்தது என் மனதை காயப்படுத்தியது. உலகில் உள்ள அனைத்து அணிகளும் வெல்ல போராடும் கோப்பை, உங்கள் தலைக்கு மேல் நீங்கள் தூக்க விரும்பும் கோப்பை மீது கால் வைத்திருப்பது எனக்கு மகிழ்ச்சியை தரவில்லை.

ஆடுகளங்களின் தன்மையை முன்கூட்டியே சரி பார்ப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. பொதுவாக பந்து வீச்சாளர்கள் மைதானத்திற்கு வந்த பிறகு ஆடுகளத்தை சரி பார்க்கிறார்கள்.

நான் ஆடுகளம் அருகில் செல்வதில்லை. ஏனென்றால் நீங்கள் பந்து வீசும் போதுதான் அது எப்படி உள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். பிறகு ஏன் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதை எளிமையாக வைத்திருப்பது நல்லது. உங்களை நிதானமாக வைத்திருங்கள். அப்போது தான் நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## நெருக்கடியில் இருந்து மீண்டு வெற்றி பெற்றது சிறப்பானது: சூர்யகுமார் யாதவ் மகிழ்ச்சி



ஆஸ்திரேலியா அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 ஆட்டம் கொண்ட 20 ஓவர் போட்டித்தொடரில் விளையாடுகிறது.

விசாகப்பட்டினத்தில் நடந்த முதல் போட்டியில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இந்தியா திரில் வெற்றி பெற்றது.

முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 208 ரன்கள் குவித்தது. ஜோஷ் இங்லிஸ் சதம் (110) அடித்தார். பின்னர் விளையாடிய இந்தியா 19.5 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 209 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

சூர்யகுமார் யாதவ் 80 ரன்னும், இஷான்கிஷன் 58 ரன்னும் எடுத்தனர். கடைசி பந்தில் வெற்றிக்கு ஒரு ரன் தேவைப்பட்ட நிலையில் ரிங்கு சிங் சிக்சர் அடித்தார். ஆனால் அது 'நோபால்' ஆக வீசப்பட்டதால் சிக்சர் கணக்கில் எடுத்து கொள்ளப்படவில்லை.

வெற்றி குறித்து இந்திய அணி கேப்டன் சூர்யகுமார் யாதவ் கூறியதாவது:

மைதானத்தில் வீரர்கள் திறமையை வெளிப்படுத்திய விதத்தில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். நாங்கள் நெருக்கடியில் இருந்தோம். ஆனால் அதில் இருந்து ஒவ்வொரும் மீண்டு வெற்றி பெற்றது சிறப்பானது.

கேப்டன் பொறுப்பு என்பது ஒரு பெருமையான தருணம். இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்ற கனவு எல்லோருக்கும் இருக்கும். இன்று நான் கேப்டனாக அறிமுகமாகி விளையாடியது மிகப்பெரிய தருணமாக நினைக்கிறேன்.

இந்த போட்டியின் போது 2வது பாதியில் பனி இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் பனி தாக்கம் இல்லை. இந்த மைதானம் சிறியது என்று தெரியும். இதனால் 230 ரன்கள் இலக்கு வரும் என்று நினைத்தேன். ஆனால் கடைசி கட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசி ஆஸ்திரேலியாவை கட்டுப்படுத்தினர். 16வது ஓவருக்கு பிறகு மூன்று வேகப்பந்து வீச்சாளர்களும் ஆட்டத்தை எங்கள் பக்கம் கொண்டு வந்தனர். இது அற்புதமானது. இஷான் கிஷனிடம், இலக்கை பற்றி நினைக்காமல் உங்களது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துங்கள். 10 ஓவர்களுக்கு பிறகு சேசிங் செய்ய வேண்டிய ரன்கள் எவ்வளவு என்று பார்த்து கொள்ளலாம் என்று கூறினேன்.

இதனால் ரன் இலக்கை தொட முடிந்தது. ரிங்கு சிங் அருமையாக போட்டியை முடித்து வைத்தார். நான் கேப்டன்சியை டிரஸ்சிங் ரூமில் விட்டு விட்டேன். நான் 10 அல்லது 40 பந்துகளில் பேட்டிங் செய்தாலும் ரசித்து விளையாட முயற்சித்தேன். மைதானத்தில் ரசிகர்கள் பெரும் ஆதரவு அளித்தனர். இவ்வாறு அவர் கூறினார். இரு அணிகள் மோதும் 2வது இருபது ஓவர் போட்டி 26ந்தேதி திருவனந்தபுரத்தில் நடக்கிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.